சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் எந்தெந்தப் பகுதிகளிலே கூடுதலாக வருகின்றனவோ, அந்தப் பகுதிகளில் ஆய்வினை மேற்கொண்டு, தேவைப்படுவதன் அடிப்படையிலேதான் புதிய கல்லூரிகளைத் தொடங்குகின்றது. புதிதாக ஒரு பாடப் பிரிவு தொடங்கினால், அந்த இடத்திலே இருக்கின்ற மாணாக்கர்களின் விண்ணப்பங்கள் பூர்த்தியாவதைக் கருத்தில்கொண்டு, ஒரு சில இடங்களிலே தேவைக்கேற்ப, பாடப் பிரிவுகளை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்தில், மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் அருகிலே இருக்கக்கூடிய கல்லூரிகளிலே அதிகமாகப் பெறப்படுகின்றன என்றால், அதுகுறித்து எதிர்வரும் காலங்களில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

141—

நவீன அரிசி ஆலை

***52076—திரு. சு. ரவி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, பள்ளூர் கிராமத்தில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, பள்ளூர் கிராமத்தில் நவீன அரிசி ஆலை அமைப்பதற்குத் தகுதியான இடம் கிடைக்கும்பட்சத்தில், தேவைக்கேற்ப நவீன அரிசி ஆலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத்

2020 மார்ச் 20]

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் மீளா துயில் கொண்டிருக்கும் அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். 'விவசாயத்தைத் துறந்த நாடும், விவசாயத்தை மறந்த நாடும் வாழ்ந்ததாக வரலாறு' இல்லை என்பதை தினந்தோறும் சிந்தித்து, காவேரி–டெல்டா பகுதிகளை வேளாண் மண்டலமாக அறிவித்து விவசாயிகளைக் காப்பாற்றியவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அதுமட்டுமல்ல, 'வாலாட்டும் செல்வம் வீட்டிலிருந்தால், தாலாட்டும் செல்வம் தானாக வரும்' என்ற பழமொழியை இன்றைக்கு நிரூபிக்கின்ற வகையிலே, விவசாயிகளுக்கு கால்நடைகள்மூலம் இரண்டு மடங்கு வருமானம் ஈட்டிட சர்வதேச தரத்திலே 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கால்நடை ஆராய்ச்சி மையம் கொண்டு வந்து சாதனை படைத்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு ஏரோட்டவும் தெரியும்; நாடாளவும் தெரியும் என நிரூபித்துக் கொண்டிருக்கும் ஓர் உண்மை விவசாயி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களையும், அரசுக்குத் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், எங்கள் மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. K.C.V. அவர்களையும் தொகுதி மக்களின் சார்பிலே பணிவோடு வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை மாவட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். சோளிங்கர் தொகுதியையும், அரக்கோணம் தொகுதியையும் உள்ளடக்கியது நெமிலி ஒன்றியம். ராணிப்பேட்டை மாவட்டத்திலே இதுவரை 45 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 25 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நெமிலி ஒன்றியத்தில் மட்டுமே திறக்கப்பட்டிருக்கின்றன. காரணம், நெமிலி ஒன்றியம் முழுக்க, முழுக்க நெல் சாகுபடி நடைபெறுகிற பகுதியாகும். அந்தப் பகுதி மக்கள் விவசாயத்தை முழுவதுமாக நம்பியிருக்கிறார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கூலி விவசாயிகள் அதிகமாக இருக்கின்றார்கள். நெமிலி

ஒன்றியத்தின் மையப் பகுதியான பள்ளூர் ஊராட்சியில் 11 ஏக்கர் அரசு நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் நவீன அரிசி ஆலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். உணவுத் துறையிலே பல்வேறு விருதுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் இடம் கிடைக்கின்றபட்சத்தில், பரிசீலிக்கப்படும் என்ற நல்ல பதிலைத் தெரிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10–45

அரசு நிலம் தயாராக இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அந்த நவீன அரிசி ஆலையை அங்கு அமைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துவதற்குக் காரணம், நெமிலி ஒன்றியத்தில் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. அதுமட்டுமல்ல. தமிழக வட பகுதிகளான கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அரசு நவீன அரிசி ஆலைகள் ஏதும் இல்லை. எனவே இங்கு அரிசி ஆலையைக் கொண்டு வந்தால், அருகாமையில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கெல்லாம் அரிசி வழங்கலாம். கூலி விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே ஊருக்கே சோறு போடுபவன் விவசாயி என்று உலகிற்கு இன்றைக்கு உணர்த்தி வருகின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்கள் விவசாயிகளுக்கு எத்தனையோ திட்டங்களையெல்லாம் மிகப் பெரிய அளவில் கொடுக்கின்றார்கள். இது ஒரு சிறிய திட்டம். மாண்புமிகு அண்ணன் அவர்கள் இந்தக் கூட்டத்தொடரில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி, நீங்கள் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். அடுத்தவர்களுக்குக் கேள்வி கேட்க வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு அண்ணன் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரில் என்னுடைய அரக்கோணம் தொகுதியில் உள்ள பள்ளூர் ஊராட்சியில் நவீன அரிசி ஆலையைக் கொண்டுவர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 20]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அதிநவீனமயமாக்கப்பட்ட 21 நவீன அரிசி ஆலைகள் தமிழ்நாடு முழுவதும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மேலும், 330 நெல் அரைவை முகவர்கள்மூலம் 20 இலட்சம் மெ. டன் நெல், அரைவை செய்ய வாய்ப்பு உள்ளது. நவீன அரிசி ஆலைகள்மூலம் 5 இலட்சம் மெ. டன் நெல்லும் அரைப்பதற்குரிய வாய்ப்பு உள்ளது. தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்ற நெல்லை அரைப்பதற்குரிய வாய்ப்பு இப்போது முழுமையாக இருக்கின்றது. இருந்தபோதிலும், நெல் விளைச்சல், நிதி நிலைமை, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் நவீன அரிசி ஆலைகளை அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. ஏற்கெனவே 21 நவீன அரிசி ஆலைகள் இருந்தபோதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒன்றும், திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றும் என நவீன அரிசி ஆலைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நேற்றைக்குக்கூட நவீன அரிசி ஆலை ஒன்று ஆத்தூரில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து இந்தக் கோரிக்கையினை வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள். நெமிலி ஒன்றியத்தில் அதிகமான நெல் விளைச்சல் இருக்கின்ற காரணத்தினால் அங்கு நவீன அரிசி ஆலை வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டு வருகிறார். வருங்காலத்தில் முன்னுரிமை கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெமிலி ஒன்றியத்தில் 25 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த வாரம்கூட நானும் சோளிங்கர் எம்.எல்.ஏ.–வும் 4 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க இருக்கின்றோம். கொள்முதல் செய்யப்படும் நெல்லை சேமித்து வைக்க கொஞ்சம்

சிரமப்படுகின்றார்கள். ஆகவே, நெமிலி ஒன்றியத்தில் ஒரு திறந்தவெளி சேமிப்புக் கிடங்கினை தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத் துறையினுடைய கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எல்லாக் காலங்களிலும் முனைப்பாக இருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் மட்டும் 1,539 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு கிடங்குகளின் கட்டமைப்புகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேம்படுத்தி இருக்கின்றது. இந்த ஆண்டு வேலூர் மாவட்டத்தில் 31,764 மெ. டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. அதில் நெமிலி பகுதியில் மட்டும் 13,563 மெ. டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட டெல்டா அல்லாத பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுமா என்ற வினாவை எழுப்பினார்கள். இந்த ஆண்டு மட்டும் வேலூர் மாவட்டத்தில் 35 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 31,764 மெ. டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, அந்தப் பகுதியில் சேமித்து வைப்பதற்கு கிடங்கு ஒன்று வேண்டுமென்று கேட்டார்கள். அதுவும் பரிசீலிக்கப்படும் என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக இயங்கும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு குவிண்டால் ஒன்றுக்கு அரைவைக் கூலியாக 10 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. இதை உயர்த்தி வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

2020 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்–முன்னாள் அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்வி பரிசீலனையில் உள்ளது. பரிசீலனையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

142—

கால்நடை மருத்துவமனை

***54341—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி, கொமக்கம்பேடு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூந்தமல்லி தொகுதி, கொமக்கம்பேடு ஊராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக கால்நடை மருத்துவமனைத் துவக்க கோரியுள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி முதலில் கால்நடைக் கிளை நிலையம் தோற்றுவிக்கப்பட்டு, பின்பு கால்நடை மருந்தகமாகவும், அதற்குப் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தது 3000 கால்நடை அலகுகள் இருத்தல் வேண்டும். கொமக்கம்பேடு ஊராட்சியில் கால்நடை அலகுகளின்